10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

எத்திராலி 2018

Ethiroli

குரல் 01 அதிர்வு 222 திங்கட்கிழமை ஜனவரி 01 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

TOPAZ
No.01 Shop in Jaffna
Wedding Frocks
Measure Tailoring
Party Sarees & All Kinds of Items
Party Frocks
Wedding Sarees
Specialist in Wedding Suits
TOPAZ
TOPAZ Mall
TOPAZ CUSTOM TAILORS
topazagm@gmail.com | www.topazjaffna.com | topazjaffna | topazjaffna | topazjaffna
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும் நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

புலிகளின் பாதைக்கு திருப்புவோம் கூட்டமைப்பை

ஜனநாயகப் போராளிகள் உறுதி

யாழ்ப்பாணம், ஜனவரி 01

தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் விடுதலைப் புலிகள் எட்டிய தீர்மானத்தை நோக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நகர்த்தும் முயற்சிகளை நாம் மேற்கொண் டுள்ளோம் என ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது.

06

தனம்ஸ் ரெக்ஸ்ரைல்
இல. 22A நவீன சந்தை, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 0212228504
இல. 20 II நவீன சந்தை (மேல்மாடி) பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 0212227306

அரசியலுக்கு வருவேன்

சென்னை, ஜன. 01

நான் அரசியலுக்கு வருவது உறுதி. இது காலத்தின் கட்டாயம். அடுத்த சட்ட சபைத் தேர்தலில் தனிக்கட்சி ஆரம்பித்து

06

YARL PHONE SHOP
யாழ்
போன் சொப்
SAMSUNG
இல. 09, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை வளாகம், யாழ்ப்பாணம்.
இல.10, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.
இல.14, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.
இல.15, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.
Tel: 021 - 222 3817 / 021 - 222 7125 / 021 - 221 5455 / 077 - 361 1282

Prince Travels
Route Permit Buses
JAFFNA - COLOMBO
FREE WiFi ZONE
Manipay - Siththankerni - Pandatharippu - Vilan - Thellippalai
KKS Road - JAFFNA
Vavuniya - Puttalam - Negambo
Armour street - Pettah - wellawatta
Dehiwala - Moratuwa.
PHONE CHARGER
ADJUSTABLE SEAT
FULL INSURANCE
DVD VIDEO/AUDIO
Leading Travels of jaffna
Happy New year
FOR BOOKING
JAFFNA -0778896771 COLOMBO -0778859772

www.relianceinternationalms.com
ADVICE FOR ALL AUSTRALIAN VISAS AND CITIZENSHIP
RELIANCE INTERNATIONAL MIGRATION SERVICES
Australian Office :
Address: No: 9, Quarters Blvd, Cranbourne West , VIC 3977
Tel : 61459450000
Sri Lanka office :
Contact Swarna
33/1 Kirillapone Avenue
Colombo 5, Sri Lanka.
Mobile : 0773112240 , 5637668
MIA
Member of Migration Institute of Australia
Consultation by appointment only.
Tel: 0459450000
Email: relianceinternationalms@gmail.com
immigrationservices@bigpond.com
Web: www.relianceinternationalms.com
Contact us for consultation with
Thilinika Wijesinghe
Registered Migration Agent
(MARN: 1463863 MIA: 8531)

உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்
உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்
பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்
• த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
• இ-மெயில் info@rainbowpages.lk
• rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
• 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
• விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.
SLT ரெலிஸ்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.
SLT RAINBOW PAGES
Print & Digital Directories
உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

மாவிட்டபுரம் ஆலயத்தில்

தமிழர் சம உரிமை இயக்க தேர்தல் முன்மொழிவு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.01

தமிழ்த் தேசியப் பேரவையுடன் இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் களம் இறங்கியுள்ள தமிழர் சம உரிமை இயக்கத்தின் முன்மொழிவுகள் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் வைத்து நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன.

வலி.வடக்கு பிரதேச சபை வேட்பாளர் தா.நிகேதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்டு விசேட உரை நிகழ்த்தினார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து தேர்தல் முன்மொழிவுகள் வெளியிடப்பட்டன.

குறித்த முன்மொழிவுகளை சட்டத்தரணி காண்டீபன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரனிடம் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் மாந்தை, பூநகரி, வலி.மேற்கு, வலி.வடக்கு மற்றும் காரை நகர் பிரதேச சபைகளுக்காக தமிழர் சம உரிமை இயக்கத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களும், சட்டத்தரணிகளான மணிவண்ணன், ஜெயரூபன், திருக்குமரன், காண்டீபன் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் காரைநகர், வலி.மேற்கு, வலி.வடக்கு, மன்னார் மாந்தை, பூநகரி, வவுனியா மற்றும் பொத்துவில் ஆகிய பிரதேச சபைகளுக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் தமிழர் சம உரிமை இயக்கம் வேட்பாளர்களைக் களம் இறக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

'திம்பு 'குமாரசாமி காலமானார்

யாழ்ப்பாணம், ஜன.01

இலங்கை நாடாளுமன்ற சமகால உரைபெயர்ப்பாளர் செல்லையா குமாரசாமி காலமானார்.

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமிழ், ஆங்கிலம், இலத்தீன், ஜேர்மன், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். 1961 முதல் 1972 வரை நாடாளுமன்ற செனட் மொழிபெயர்ப்பாளராக இருந்த இவர் பின்னர் நாடாளுமன்றச் செயலாளர் அலுவலகத்தில் உத்தியோகத்தராக இணைந்து கொண்டார்.

அரச பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின் 1997 முதல் 2012 வரை பதில் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றியதுடன் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்சவினால் வேக இணை மொழி பெயர்ப்பாளர் எனவும் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

1985 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ் போராளிகளுக்குமிடையே பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத் தரப்பு மொழிபெயர்ப்பாளராக கலந்து கொண்டமையால் திம்பு குமாரசாமி, பூட்டான் என்ற பெயர்களாலும் அவர் அழைக்கப்பட்டார். தன் சொந்த ஊரான அளவெட்டியில் கடந்த 29 ஆம் திகதி அவர் காலமானார். (அ)

கூட்டமைப்பின் வேட்பாளர்கள் வவுனியாவில் அறிமுகம்

வவுனியா, ஜன.01

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட தலைவரும் வடமாகாண சபை உறுப்பினருமான ப.சத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது வேட்பாளர்கள் அறிமுகம், வேட்பாளர்களுக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் சமகால அரசியல் தொடர்பிலும் வேட்பாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இதில் தமிழரசுக் கட்சித் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சிவமோகன் ஆகியோரும் இதன்போது கலந்து கொண்டனர். (அ)

களஞ்சியசாலையில் திடீர்த் தீ பரவல்

கொழும்பு, ஜன.01

உறுகொடவத்தை மேம்பாலத்துக்கு அருகில் உள்ள களஞ்சியசாலையில் தீப்பரவல் சம்பவம் ஒன்று நேற்று ஏற்பட்டது.

பகல் 12.45 மணியளவில் ஏற்பட்ட இந்த தீயை அணைப்பதற்கு 5 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

கார்ட்போட் மட்டைகள், பிளாஸ்ரிக் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த களஞ்சியசாலையிலேயே தீப்பற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீணை அணைப்பதுக்கு கொழும்பு தீயணைப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் தீயணைப்பு வண்டிகள் பயன்படுத்தப்பட்டன.

இதேவேளை இந்தத் தீயினால் குறித்த களஞ்சியசாலைக்கு அருகில் இருந்த வீடுகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

உப்புக்கேணிக் குளத்தை புனரமைக்கக் கோரிக்கை

சாவகச்சேரி, ஜன.01

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கச்சாய் வீதி, பெரியமாவடிப் பகுதியில் அமைந்துள்ள உப்புக்கேணி குளமானது பல வருடங்களாக எந்தவொரு புனரமைப்புப் இன்றி சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுவதால் அதனைச் சீர்செய்து தருமாறு மக்கள் கோரியுள்ளனர்.

சுமார் 60 வருடங்களுக்கு முன்னர் விவசாயத் தேவை கருதி வெட்டப்பட்ட குறித்த குளமானது தற்போது விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது. இந்தக் குளத்தினைச் சூழ 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் குளமானது மிகவும் சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுகிறது.

இந்தக் குளத்தில் இருந்து நுளம்பு பெருக்கெடுத்து குடிமனைகளுக்குள் பரவுவதாகவும் இதன் காரணமாக சுற்றுச் சூழலில் உள்ள சிலருக்கு டெங்குத் தாக்கம் ஏற்பட்டு தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த குளத்தினை மூட முடியாது எனவும் மூடினால் குடிமனைகளுக்குள் வெள்ளம் தேங்கும் அபாயம் நிலவும் எனவும் தெரிவித்துள்ளனர். ஆகவே இந்தக்குளத்தினை துப்பரவு செய்து ஆழமாக்கி குளக்கட்டு போன்ற குளத்திற்குரிய அம்சங்களை அமைக்க வேண்டும் என பிரதேச மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். அத்துடன் மீன் வளர்ப்பினை மேற்கொள்வதன் மூலம் குளத்தில் நுளம்பு பெருக்கத்தை தடுக்க முடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

தற்போது குளத்து நீர் அசுத்தமடைந்திருப்பதால் மீன்கள் இல்லாமை குறிப்பிடத்தக்கது. குளத்தின் உள்ளேயும், அருகாமையிலும் விஷமிகள் குப்பைகள், பிளாஸ்ரிக் போத்தல்களை வீசி வருவதாகவும் இவ்வாறு துர் நடத்தைகளை மேற்கொள்பவர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

குளத்தினைப் புனரமைப்பது தொடர்பாக கடந்த கால நகரசபையினரின் பொதுக் கூட்டங்கள், அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள், அரசியல் கூட்டங்கள், மில்லியன் அபிவிருத்தித் திட்ட கூட்டம் போன்றவற்றில் பேசப்பட்ட போதிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். உரிய தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுத்து குளச் சூழலில் உள்ள மக்களுக்கு எந்தவித தொற்றுக்களும் ஏற்படாத வாறு பாதுகாக்க முன்வர வேண்டும் என வும் கேட்டுக் கொண்டுள்ளனர். உப்புக்கேணி குளத்திற்கு சாவகச்சேரியின் பல பாகங்களில் இருந்தும் மாரி காலத்தில் வெள்ள நீர் ஓதேங்கி நிற்பது குறிப்பிடத்தக்கது. (அ)

எதிரொலி
Ethiroli
திங்கள், 01 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

இன்னொரு பாடம் காத்திருக்கிறது

இன்னொரு புதிய ஆண்டு புலர்ந்திருக்கிறது.

கடந்து போன 2017 எங்கள் வாழ்வில் பல பாடங்களைப் போதித்துவிட்டுச் சென்றிருக்கிறது. குறிப்பாக கடந்த வருடம் தமிழ்மக்களின் ஜனநாயகப்போராட்டங்களுக்கான உத்வேகத்தை அளித்திருக்கிறது. இதுநாள்வரையும் தமிழ் மக்கள் தங்கள் பிரச்சினைகள் தொடர்பில் மாதத்துக்கு ஒரு தடவையோ, வருடத்துக்கு ஒரு தடவையோ பொதுவான இடமொன்றில் கூடி, சாத்வீகப் போராட்டத்தை நடத்தி, அதிகாரிகளுக்கு மகஜர் அனுப்பியதோடு கலைந்து சென்று விடுவார்கள். அதற்குப் பின்னர் அவர்கள் கொடுத்த மகஜரும் குப்பைக் கூடைக்குள் பத்திரமாக இடம் பிடித்து விட, மீண்டுமொரு தினத்தில் பழையபடி, ஆர்ப்பாட்டம், பதாகை, மகஜர் என்று இன்னொரு போராட்டம் நடக்கும். அதன் போதும் எதுவும் நடந்துவிடுவதில்லை. காணி விடுவிப்பு, காணாமல் போனோர் பிரச்சினை, பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினை என எல்லாவற்றுக்கும் இதுதான் கதி. இப்படி பிரச்சினைகளின் பெயரால் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்கள் எல்லாமே 'தேவையேயில்லாத ஆணிகளாகவே' அரசு நோக்கி வந்தது. அதனால் எதையும் புடுங்கவும் முயல்வதில்லை.

இப்படிப்பட்ட நிலையில் தான், கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு மக்கள் தங்கள் காணிகளை விடுவிக்கக் கோரி, தங்கள் சொந்த நிலங்களுக்கு அருகே நிலைகொண்டு இரவு பகலாக ஓயாமல் போராடத் தொடங்கினார்கள். வழக்கம் போல ஓரிரு நாட்களில் அந்த மக்கள் அங்கிருந்து அகன்று விடுவார்கள் என்றே அரசும் படைத்தரப்பும் நினைத்தார்கள். ஆனால் கேப்பாபிலவு மக்கள் அசையவில்லை. தங்கள் நிலங்களைத் தரும் வரை அங்கிருந்து போகமாட்டோம் என்ற ஓர்மத்தோடு படைகளின் மிரட்டல்களுக்கு மத்தியிலும் அகிம்சைப் போரைத் தொடர்ந்தார்கள். விளைவு? படைத்தரப்பு பணிந்தது. பிலக்குடியிருப்பு மக்களின் காணியில் இருந்து படைத்தரப்பு வெளியேறியது.

அதன் பின்னர் பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு கேப்பாபிலவின் எஞ்சிய பகுதிகளையும் மீட்கும் அடுத்த கட்டப் போரும் தொடங்கியது. வடக்கின் பல பகுதிகளிலும் இவ்வாறு காணி விடுவிப்புப் போர்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட, அவற்றில் இருந்து படைகள் மெல்ல மெல்ல விலகி, அந்தக் காணிகள் எல்லாம் மக்களிடம் மீளக் கிடைக்கத் தொடங்கின.

காணி விடுப்பில் மட்டுமல்லாது காணாமல் போனோர் பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை என்பன தொடர்பிலும் 'கேப்பாபிலவு' பாணியிலான தொடர் அகிம்சைப் போராட்டங்கள் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி என்று பரவின. ஆயினும் காணிப்பிரச்சினை போல மற்றைய பிரச்சினைகளுக்கு 'கேப்பாபிலவு' உத்தி கைகொடுக்கவில்லை.

பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்கு, ஓரளவு தீர்வு கிடைத்தபோதும், காணாமல் போனோர் பிரச்சினைக்காக, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 300 நாட்களாகப் போராடி வருகின்ற போதும், எவ்வித முன்னேற்றமும் கிட்டவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால வரை, போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் சென்று கதைத்தும் கூட ஏமாற்றம் மட்டுமே அவர்களுக்கு மிச்சமாயிருக்கிறது. என்றாலும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதோடு, நடையைக் கட்டாமல் இன்னும் பொறி கக்கும் விழியோடு போராட்டத்தை உத்வேகமாக அவர்கள் முன்னெடுத்தபடியுள்ளனர்.

சரி, இப்படியெல்லாம் தமிழர் தேசமெங்கும் போராட்டம் நடக்கிறதே, அவர்களின் பிரதிநிதிகள் என்று வாக்குப் பெற்று, பதவிகளில் உட்கார்ந்திருப்பவர்கள் என்ன செய்கிறார்கள். பாவம், அவர்களுக்கு தங்கள் பதவிகளைக் காத்துக் கொள்ளவும், இன்னும் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும், நீ பெரிதா நான் பெரிதா என்று சண்டையிடவும், அடுத்தவர்களுக்கு குழி பறிக்கவுமே நேரம் போதாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் எப்படி அவர்கள் மக்கள் பிரச்சினைகள் பற்றி அக்கறை கொள்ளமுடியும்.

அழுதாலும் பிள்ளையை அரசியல்வாதிகளை நம்பாமல் நாமே பெறவேண்டும் என்ற படிப்பினையை 2017 தந்துவிட்டுச் சென்றிருக்கிறது.

2018 என்ன பாடத்தைத் தரக் காத்திருக்கின்றதோ தெரியவில்லை.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

ஒற்றுமையாக செயற்படுங்கள்

கூட்டமைப்புக்கு மன்னார் ஆயர் அறிவுறுத்தல்

மன்னார், ஜன. 01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாகவும், பலமாகவும் செயற்பட வேண்டும் என மன்னார் மாவட்டத்தின் புதிய ஆயராகப் பதவியேற்ற பேரருட் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும், புதிய ஆயருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மன்னார் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போதே மன்னார் ஆயர் இவ்வாறு அறிவுறுத்தினார். புதிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சி, இடைக்கால அறிக்கை என்பன தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆயருக்கு எடுத்துக் கூறினார். இதன்போது, சமகால அரசியல் விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

பதிலுக்கு தமிழ் அரசியல் தொடர்பில் ஊடகங்களின் ஊடாகவே இதுவரை அறிந்து வைத்துள்ளேன் என்று ஆயர் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இதுவரை நான்கு கட்சிகள் செயற்பட்டு வந்த நிலையில் தற்போது மூன்று கட்சிகள் இணைந்தே உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் ஆயருக்கு எடுத்துக் கூறப்பட்டது. இதன்போது, ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். அதுவே பலமாக இருக்கும் என்று ஆயர் அறிவுறுத்தினார்.

இந்த சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பிறிமுஸ் சிராய்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.(ச)

அதிரடி காட்டுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 01

341 உள்ளூராட்சி சபைகளுக்கும் தனித் தனியான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து வெளியிடவுள்ளது ஜே.வி.பி. வரும் 7ஆம் திகதி இந்தத் தயாரிப்பு வெளியிடப்படும் என அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதி 341 உள்ளூராட்சி சபைகளுக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது. அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களாக 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் களமிறங்கியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்துவிட்டது. இந்நிலையில் நாளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பிரசார நடவடிக்கைகளை கொழும்பில் ஆரம்பிக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி நாளை மறுதினம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமது கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் கலந்துரையாடவுள்ளதுடன் தமது தேர்தல் பிரசாரத்தை 6 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த மூன்று அணிகளைத் தவிர நாடளாவிய ரீதியில் தனித்துப் போட்டியிடும் கட்சியாக ஜே.வி.பி. உள்ளது. இக்கட்சி அடிமட்டத்தில் தமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டது. அடுத்தவாரம் முதல் தீவிர பிரசாரத்தை நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கவுள்ளது. இந்நிலையில், அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் தனித் தனியாக அபிவிருத்தித் திட்டங்களை அக் கட்சி வகுத்துள்ளது.

கொழும்பு மாநகருக்கு அமைத்துள்ள அபிவிருத்தித் திட்டத்தை எதிர் வரும் 7ஆம் திகதி ஜே.வி.பி. வெளியிடவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளுக்கும் உட்பட்ட வட்டாரங்களில் தமது அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஜே.வி.பி. விளக்கமளிக்கவுள்ளது. (ச)

பொலித்தீன் தடை நடைமுறைக்கு

கொழும்பு, ஜன. 01

லன்ஞ்சீற், பொலித்தீன் என்பவற்றுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை இன்று தொடக்கம் அமுலுக்கு வருவதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவித்துள்ளது.

லன்ஞ்சீற், பொலித்தீன் என்பவற்றுக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தடை விதிக்கப்பட்டது.

ஆனாலும் அவற்றுக்கு சலுகை காலம் வழங்கப்பட்டது. இந்நிலையில் லன்ஞ்சீற், பொலித்தீன் மற்றும் அது சார்ந்த தயாரிப்புக்களை பயன்படுத்த இன்று தொடக்கம் முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்த இன்று தொடக்கம் விசேட சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்படும். சட்டத்தை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

மீண்டும் பழைய பல்லவி பாடுகிறார் ரெலோ தலைவர்

மன்னார், ஜன. 01

புதிய அரசியல் அமைப்பில் தமிழ் மக்களுக்குச் சரியான தீர்வு கிடைக்காவிட்டால் எம்மால் சர்வதேசத்திடம் நியாயத்தைக் கேட்க முடியும் என ரெலோவின் தலைவரும் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அனைத்துக் கட்சிகளும் எதிராளியாகப் பார்ப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத்தான். தென்னிலங்கையில் நடைபெறும் விடயங்களை விமர்சிப்பது குறைவாகவே உள்ளது. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பல வீனப்படுத்த தென்னிலங்கையிலும் வடக்கு, கிழக்கிலும் பல கட்சிகள் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் தேசியத்துக்காகத் தன் இனம் சார்ந்த, மொழி சார்ந்த பிரச்சினைகளைக் கொண்டு செல்கின்ற கட்சியாகவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரையும் விமர்சிப்பது இல்லை. இதனால்தான் எம் மீது விமர்சனம் வருகின்றது. காய்க்கின்ற மரத்துக்குத்தான் கல் எறி விழுகின்றது. எங்கள் மீதான விமர்சனத்தை நாங்கள் பார்த்து அதனைத் திருத்துகின்ற வழியைத்தான் செய்து வருகின்றோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பொறுத்தவரை பல சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அதில் இடைக்கால அறிக்கை பற்றியும் ஐ.நா. பற்றியும் எழுதியுள்ளார்கள். எங்கு எதனைச் சொல்லுவது என்றே தெரியாது நிற்கிறார்கள். புதிய அரசியலமைப்பு தொடர்பில் ஒரு இடைக்கால அறிக்கையே வந்துள்ளது. இடைக்கால அறிக்கையையே ஒன்றுமில்லை ஒன்றும் நடக்கவில்லை என்று கூறுகின்றார்கள்.

புதிய அரசமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் தெளிவாகக்கூறப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றிப் புதிய தலைமையை உருவாக்க வேண்டுமென்றெல்லாம் கதைக்கின்றார்கள். இவையே சுவரொட்டியில் கூடக் காணப்படுகின்றன. உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது உள்ளூர் ஆட்சியே. எமது பிரதேசங்களை, எமது வட்டாரங்களை அபிவிருத்தி செய்வதே அது. இதனைப் புரியாதவர்கள்தான் இன்று தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். இதனால் இவ்வகையான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

பெரும் ஆயுதப் போராட்டத்தை மௌனிக்கச் செய்த சர்வதேசத்திடம், சர்வாதிகாரம் செய்த மஹிந்தவை மாற்றியமைத்த சர்வதேசத்திடம் நாங்கள் சில விடயங்களைக் கேட்பதற்குச் செல்வதாயின் புதிய அரசமைப்புக்கு எங்களால் குழப்பமில்லாத வகையில் நடந்துகொள்ளவேண்டும். அவ்வாறு செல்வதன் மூலமே, எமக்குச் சரியான தீர்வு கிடைக்காவிட்டால் சர்வதேசத்திடம் நியாயத்தைக் கேட்கமுடியும். இதற்காகத்தான் ஒரு சில நடவடிக்கைகளை அரசுடன் இணங்கிச் செய்து வருகின்றோம். இதற்காக அரசின் அடிவருடிகளாக நாங்கள் இருக்கவில்லை. இணங்கிச் செயற்பட்டதனால்தான் இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ளது. இவை எமது மக்களின் நியாயத்தை கேட்கின்ற சந்தர்ப்பங்களே தவிரக் காட்டிக் கொடுப்பதல்ல - என்றார். (ச)

இன்று நாளும் கோளும்

01.01.2018 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 17 ஆம் நாள்

சதுர்த்தசி மு.ப. 11.26 மணி வரை | மிருகசீருடம் பி.ப. 03.05 மணி வரை | குளிகை பி.ப. 01.30-03.00
இராகுகாலம் 07.30 - 09.00 | சுபநேரம் மு.ப. 06.30 - 07.30 | எமகண்டம் மு.ப. 10.30 - 12.00

மேஷம்	ரிஷபம்	மிதுனம்	கடகம்	சிம்மம்	கன்னி	துலாம்	விருச்சிகம்	தனுசு	மகரம்	கும்பம்	மீனம்
பெருமை	பொறுமை	ஆக்கம்	மகிழ்ச்சி	ஆதாயம்	அமைதி	நலம்	பாராட்டு	உற்சாகம்	நன்மை	ஊக்கம்	இன்பம்

அர்ஜூன மகேந்திரன் மீது கடுமையான குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.01

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பாக முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன மகேந்திரன் மீது வலு வான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள தாகவும், இதனுடன் 9 அரசியல்வாதி கள் தொடர்புபட்டுள்ளதாகவும் கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தகவல் வெளி யிட்டுள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி விற்பனை யில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பாக விசாரிக்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக் கப்பட்ட மூன்று உறுப்பினர் கொண்ட ஆணைக்குழுவின் அறிக்கை கையளிக் கப்பட்டுள்ளது.

எதிர்வரும், பெப்ரவரி 10ஆம் திகதி, உள்ளூராட்சித் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், இந்த விசாரணை அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டால், அதன் உள்ள டக்கங்கள் பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதாக அமையும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

இண்ணமும் இரகசியமாகப் பாதுகாக்கப் படும் அறிக்கையில், மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தொடர்புடையவர் கள் என்று குறைந்தபட்சம் ஒன்பது அரசியல்வாதிகளின் பெயர்கள் உள்ள டக்கப்பட்டுள்ளதாக ஊகங்கள் உலாவு கின்றன.

அதேவேளை, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுனர் அர்ஜூன மகேந்தி ரன் மீதும், அவரது மருமகன் அர்ஜூன் அலோசியஸ் மீதும் கடுமையான குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் இந்த பிணைமுறி மோசடி மூலம் சட்டவிரோதமாக பில்லியன் கணக்கான நிதி ஆதாயத்தைப் பெற்றதாக கூறப்படு கிறது.

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க தொடர்பாகவும் இந்த அறிக்கை யில் குறிப்புகள் இடம்பெற்றுள்ளதாக வும், அவர் கொள்ளுப்பிட்டியில் அடுக்கு மாடிக் குடியிருப்பு ஒன்றைப் பெற்றுக் கொண்டமை தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அறிக்கை யில் கூறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

அதேவேளை மைத்திரிபால சிறி சேன இந்த அறிக்கையை எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதிக்கு முன்ன தாக பகிரங்கப்படுத்துவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த அறிக்கையை உள்ளூராட் சித் தேர்தலுக்கு முன்னர் மைத்திரி பகிரங்கப்படுத்துவார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில மூத்த அமைச் சர்கள் வலுவாக நம்புகின்றனர் என் றும் கொழும்பு ஆங்கில வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது. (அ)

அரையிறுதிக்கு சென்.மேரிஸ் தகுதி

கரவெட்டி, ஜன.01

மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தி வரும் "வடமாகாண மகுடம் " என் னும் பிளே ஒவ் தொடர் குறித்த கழ கத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் இடம் பெற்ற அரையிறுதிப்போட்டிக்குத் தெரிவாகும் முக்கிய போட்டி இடம் பெற்றது . இந்தப்போட்டியில் மன் னார் கில்லறிஸ் அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி பலப்பரீட்சை நடத்தியது . போட்டி நிறைவு பெறும் வரை பரபரப்பாக இடம்பெற்ற போட்டியில் 4-2 என்ற கோல் மன்னார் கில்லறிஸ் அணியை வீழ்த்தி நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது .(அ-66)

யாழ்.மெய்வன்மைச் சங்கத்தின் தலைவராக இளம்பிறையன் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.01

யாழ். மாவட்ட மெய்வன்மைத் தொழில் நுட்பச்சங்கத்தின் தலைவ ராக இரகசிய வாக்கெடுப்பின் மூலம் மா.இளம்பிறையன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

குறித்த சங்கத்தின் பொதுக்கூட் டம் நீண்டகால இடைவெளிக்குப் பின் கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் மா. இளம்பிறையன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது புதிய தலைவருக் கான தெரிவில் முன்னாள் தலைவர் மா.இளம்பிறையன் மற்றும் எஸ். சதீஸ்குமார் ஆகியோர் போட்டியிட் டனர். இவர்களில் தலைவரைத் தெரிவுசெய்வதற்காக இரகசிய வாக்கடுப்பு நடத்தப்பட்டது.

60 பேர் வாக்களித்ததில் 34 வாக் குகளை இளம்பிறையனும் 25 வாக்கு களை சதீஸ்குமாரும் பெற்றனர்.

9 மேலதிக வாக்குகளால் இளம் பிறையன் வெற்றி பெற்று மீண்டும் தலைவரானார். உபதலைவர்களாக சி.வசந்தகுமார், எஸ்.சதீஸ்குமார், கே.சுதாகரன் ஆகியோரும், செய லாளராக எஸ்.சிவச்செல்வனும், உப செயலாளராக ஜி.கே கிறேசியனும் பொருளாளராக எஸ்.கஜேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக வடம ராட்சிக்கு எஸ்.சுரேந்திராவும், வலி காமத்துக்கு எஸ். ஜெயந்தனும் தென் மராட்சிக்கு கே.கணநாதனும், யாழ்ப் பாணத்துக்கு எஸ்.ஸ்ரீரமணனும் தீவ கத்துக்கு எஸ் .அனோஜனும் கிளி நொச்சிக்கு எஸ். ஹரனும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-67)

கால அவகாசம் நீடிப்பு பணத்தாளை மாற்ற

கொழும்பு, ஜன. 01

சிதைக்கப்பட்ட, சேதமாக்கப்பட்ட மற் றும் கிறுக்கப்பட்ட நாணயத்தாள்களை மாற்றிக் கொள்வதற்கான கால அவகா சம் வரும் மார்ச் 31ஆடி திகதி வரை நீடிக்கப்பட்டது என மத்திய வங்கி அறி வித்துள்ளது.

சிதைக்கப்பட்ட, சேதமாக்கப்பட்ட, கிறுக்கப்பட்ட நாணயத்தாள்கள் இனி செல்லுபடியாகாது என்றும், அவற்றை வங்கிகளில் டிசெம்பர் 31ஆம் திகதிக் குள் மாற்றுமாறு இலங்கை மத்திய வங்கி அறிவித்திருந்தது.

அத்துடன், இந்தக் கால அவகாசம் முடிந்த பின்னர் சிதைக்கப்பட்ட, கிறுக்கப் பட்ட நாணயத் தாள்களை வைத்திருப் பது தண்டனைக்குரிய குற்றம் என்றும் மத்திய வங்கி எச்சரித்திருந்தது.

இந்த நிலையில், சிதைக்கப்பட்ட, கிறுக் கப்பட்ட நாணயத்தாள்களை மாற்றிக் கொள்வதற்கான கால அவகாசத்தை நீடிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணித்துள்ளார்.

இதையடுத்து 2018 மார்ச் 31ஆம் திக திக்குள் இத்தகைய நாணயத் தாள்களை மாற்றிக் கொள்ளுமாறு மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ச)

யாழ். ஆயரிடம் ஆசி பெற்றது தமிழ்த் தேசியப் பேரவை

யாழ்ப்பாணம், ஜன. 01

உள்ளூராட்சித் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சைக் கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய பேரவையினர் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக் கும் முன்னர் நேற்ற யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் குருமுதல்வர் வண. ஜெபரட்ணம் அடிகள் ஆகியோரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றனர்.

நேற்றுக் காலை 10.30 மணியள வில் யாழ். ஆயர் இல்லத்தில் சந் திப்பு நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ். மாநகர முதல்வர் வேட்பாளர் வி.மணிவண் ணன், துணை முதல்வர் வேட்பாளர் ஆ.தீபன் திலீசன் தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் வேட்பாளர்கள் பங்கேற்றனர்.

பேரவையினருடன் உரையாடிய யாழ். ஆயர் அவர்களுக்கு ஆசீர்வா தம் வழங்கினார். அதனையடுத்து ஆயர் இல்லதில் யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட் ணம் அடிகளாரையும் தமிழ்த் தேசிய பேரவையினர் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றனர். (ச)



வணக்கம். எல்லாருக்கும் புது வருட வாழ்த்துக்கள்

இண்டைக்குப் புதுசாப் பிறக்கிற புத்தாண்டை வாழ்த்தி வரவேற்கிறதிலை இந்த வில்லங்கம் விநாசி சரியான சந்தோஷப்படுகிறன். போன வருஷம் 2017 இலை சரியான கஷ்டத்தை நாங்களும் எங்கடை சனங் களும் அனுபவிச்சுப்போட்டம் எண்டு நினைக்கிறன்.

முதலியும் இண்டைக்கெண்டு காலமையே எழும்பி காரைநகர் போயிட்டு வந்திருக்கிறார். ஈழத்துச் சிதம்பரத்திலை திருவிழாவைப் பாத்திட்டுப் பொட்டுப் பிறையோடை வந்து கொஞ்சக் கடலைக் கொட்டையும் தந்துட்டு என்னை வாழ்த்திப்போட்டும் போட்டார். இண்டைக்குப் பேப்பர் கடைக்குப் போகேல்லை. வெள்ளெணப் பேப்பர் வீட்டை வந்திட்டிது.

போயாவெல்லே? பொழுது போகேல்லை. அதாலை சாக்குக் கட்டிலுக்கை கிடந்து பலதையும் யோசிச்சுக் கொண்டு படுத்திருக்கிறன். ஒரு வருசம் என்னெண்டு போனதெண்டு தெரியேல்லை. எல்லாம் நேற்றைக்கு நடந்ததெண்ணுமாப் போலை கிடக்கிது. சண்டைக்குப் பிறகு என்ன நடந்தாலும் செய்யிற கடமையளைச் செய்து சந்தோஷமா இருக்கச் சனம் பழகிட்டிது. அது தான் பெரிய காரியம். அதைத் தன்னும் பழகி யிருக்காவிட்டால் அரைவாசிச் சனம் விசர் பிடிச்சு றோட்டாலை திரிஞ்சிருக்கும். ஏதோ கும்பிட்ட கடவுள் கைவிடேல்லை எண்டு தான் யோசிச்சு ஆறுதல்பட வேண்டிக் கிடக்கு.

காணாமல்போன, காணாமல் ஆக்கப்பட்ட ஆக்க ளைத் தேடியும், காணிவிடுவிக்க எண்டு போராடியும், கட்சிப்பிரச்சினையளுக்கை சிக்கியும் சனம் சரியாக் களைச்சுப் போச்சுது எண்டு நினைக்கிறன். எவ்வ ளத்தை இழந்துபோனம். நினைக்க நினைக்க மனந் தான் இறுக்கமாக் கிடக்கு. என்னத்தைச் செய்தாலும் ஒரு திருப்தி இல்லாமல் கிடக்கு. செய்துதான் என் னத்தைக் கண்டம் எண்டு தான் யோசிக்கிறம். எதை எடுத்தாலும் அதுக்கு எதிர் கதை சொல்லவும் தடுக்க எண்டும் ஆயிரம் பேர் இருக்கினம்.

இன்னும் கன பிரச்சினையள் அப்பிடியே கிடப்பிலை கிடக்கவிட்டிட்டு 2017 மெல்லப் போகுது. நினைச்சால் துன்பந்தான். கனபேருக்குக் கண்கெட்டதும் இந்த வருசத்திலை தான், கனபேருக்கு வாகனத்திலை போய் அடிபட்டுக் கால், கை இல்லாம் போனதும் இந்த வருசத்திலை தான் எண்டு நினைக்க இன்னும் வேதனையாக் கிடக்கு. எத்தினை அமளி, துமளி நடந் திது. வாள் வெட்டு, கொலை, கொள்ளை, கோரமா வாகனங்கள் அடிபட்டு நொருங்கி, அதாலை செத்த ஆக்கள் எத்தினை பேர்.

எண்டாலும் புது வருசத்திலை நல்லது நடக்கவே னும் எண்டு ஒரு நப்பாசை கிடக்குக் கண்டியளோ. எலக்சனும் வருகிது. பல புது ஆக்களும் தாங்களும் மக்களுக்குச் சேவை செய்ய வேணும் எண்ட விருப்பத் திலை காசு கட்டி இருக்கினம். அவை வெண்டு நல்லாத் தங்கடை சேவையைச் சனத்துக்குச் செய்ய வேணும் எண்டு கடவுளைக் கும்பிடுகிறன் இந்த விநாசி.

விநாசியின்ரை விருப்பம் எப்பவும் எல்லாரும் சந்தோ ஷமா சகல சௌக்கியத்தோடையும் சீவிக்க வேணும் எண்டதுதான். "அறம் செய்ய விரும்பு" எண்டுதான் சொல்லிக் கிடக்கே ஒழிய, செய்யச் சொல்லேல்லை. அறஞ் செய்ய விரும்பினாலே போதும், அது நடக்கும் எண்டதுதான் அதின்ரை கருத்து. ஆனபடியால் 2018 எல்லாருக்கும் சந்தோஷத்தைத் தாற வருசமா வரட்டும்.

அப்ப எல்லாரும் இந்தப் புது வருஷத்திலை நல்லது நடக்கட்டும் எண்டு முதலிலை யோசிப்பம். தெரிஞ்சோ தெரியாமலோ அப்பிடி யோசிக்காட்டி இண்டைக்குத் துவக்கம் அதைப் பழகுவம். மற்றவை என்ன செய்யி னம் எண்டு நீங்கள் பாராதையுங்கோ. ஏமாத்திறவை ஏமாத்தட்டும். அவையோடை சிகோதம் வைச்சிருக் கிறவை இண்டைக்குத் துவக்கம் அதை வெண்டிக் கொண்டு வெளியிலை வாருங்கோ. ஒவ்வொருத்தரும் தாங்கள் தாங்கள் நல்ல மனுசரா மாறினாலே போதும். உலகம் நல்ல மனுசருள்ளதா வந்துவிடும்.

கடைசியா இப்ப இரண்டு நாளைக்கு முன்னம் வந்த ஏ.எல் சோதினை மறுமொழியிலை பாஸ் பண்ணின பேரப்பிள்ளையள் அத்தனைபேருக்கும் என்ரை மனப்பூர்வமான வாழ்த்துக்கள். பாய்... பாய்!

- வில்லங்கம் விநாசி

கிளிநொச்சிக் காணிகள் இன்னும் படையினர் வசமே

சிறீதரன் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜன.01

"கிளிநொச்சி மாவட்டத்தில் படையினர் வசமுள்ள 1515.07 ஏக்கர் காணிகளில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை உடனடியாக விடுவிப்பதாக படையினர் உறுதியளித்து ஒரு வருடம் கடந்துள்ள நிலையிலும் அவை இன்னும் விடுவிக்கப்படவில்லை" என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

"கிளிநொச்சி - இரணைதீவை விடுவிக்கக்கோரி அங்கு பூர்வீகமாக வாழ்ந்த மக்கள் கடந்த மே மாதம் முதலாம் திகதி முதல் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மக்களுடைய காணிகளை இன்னமும் அரசாங்கம் விடுவிப்பதற்கு தயாராகவில்லை. அதைவேளை கிளிநொச்சி நகரப் பகுதியில் நீர்த்தாங்கி அமைந்திருந்த காணியை படையினர் விடுவித்துள்ளதாகத் தெரிவித்துள்ள போதும் அதில் பழைய நீர்த்தாங்கியை அகற்றுவதற்கும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் படையினர்வசமுள்ள 1515.07 எக்கர் காணியை மக்களிடம் மீள வழங்குவற்குப் படையினர் இணக்கம் தெரிவித்திருந்தனர். எனினும் இதுவரை ஒரு துண்டு காணி கூட கிளிநொச்சி, மாவட்டத்தில் மக்களிடம் வழங்கப்படவில்லை. கிளிநொச்சி நகரில் வீழ்த்தப்பட்டிருந்த தண்ணீர் தாங்கிக் காணி மட்டும், கட்டுப்பாட்டிலிருந்து கரைச்சிப் பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், இரணைமடு படைத்தலைமையகத்தின் கீழ் உள்ள சுமார் 1,200 ஏக்கர் காணி விடுவிக்கப்படும் எனவும் படையினர் தரப்பிலிருந்து கூறப்பட்டது. ஆனால் அது கிளிநொச்சி மாவட்டத்துக்குள் சேராது. அது முல்லைத்தீவு மாவட்டத்துக்குள்ளேயே சேரும்" எனவும் அவர் தெரிவித்தார். (அ)

அந்தநாள் ஞாபகம்



01.01.2008

கொழும்பு, கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் வைத்து, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரன் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

கட்சியைக் காக்கவே கூட்டரசை அமைத்தோம்

கொழும்பு, ஜன.01

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் நோக்கில் கட்சியிலுள்ள ச்கல தரப்பினரதும் இணக்கத்துடனேயே கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டது எனவும் கட்சியின் பிளவுக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள மகிந்த தரப்பு உறுப்பினர்களே பொறுப்புக் கூறவேண்டும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தோல்விக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்கும் சில ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் நேற்று முன் தினம் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நலனுக்காகவும், தேசிய நன்மை கருதியுமே இருபெரும் கட்சிகளும் கட்சியின் கொள்கை வேறுபாடுகளையும் புறந்தள்ளி விட்டு கூட்டரசாங்கம் அமைத்ததாக கடந்த காலங்களில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலரும் தெரிவித்து வந்தனர்.

தற்பொழுது அந்தக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் இவ்வாறு கட்சி நலனுக்காகவே கூட்டரசாங்கம் அமைத்தோம் என பகிரங்மாக கூறியிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

விலகுவதா? தொடர்வதா?

தேர்தலின் பின் முடிவு

கொழும்பு, ஜன.01

தேசிய அரசாங்கத்தின் காலம் நேற்றுடன் நிறைவுக்கு வரும் நிலையில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் பின்னர் தேசிய அரசாங்கத்திலிருந்து விலகுவதா, இல்லையா என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் மாதமே தேசிய ஒப்பந்தத்தின் காலம் நிறைவடைந்தது. எனினும் ஜனாதிபதியின் கோரிக்கைக்கமைய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு கூட்டத்தின் முடிவுகளுக்கு அமைய இந்த ஒப்பந்தத்தின் காலம் நீடிக்கப்பட்டது. இது தொடர்பில் இந்தத் தேர்தல் காலத்தில் நாம் முடிவு எடுக்கப் போவதில்லை மாறாக தேர்தல் நிறைவடைந்த பின்னர் முடிவுகள் எடுக்கப்படுமென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, "தற்போதைய அரசாங்கம் எடுத்த பல முடிவுகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தடையை ஏற்படுத்தியது. இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி பல வருடங்கள் தேசிய அரசாங்கத்தின் கீழ் செயற்பட வேண்டுமென ஜனாதிபதி மற்றும் பிரதமர் அது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார். (அ)

13 இந்திய மீனவர்கள் கச்சதீவுக் கடலில் கைது

யாழ்ப்பாணம், ஜன.01

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 13 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கச்சதீவுப் பகுதியில் வைத்து நேற்று அதிகாலை இவர்களைக் கைது செய்ததாக கடற்படை ஊடகப் பேச்சாளர் தினேஸ் பண்டார தெரிவித்துள்ளார்.

குறித்த மீனவர்களது இரண்டு மீன்பிடி படகுகளையும் கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் மேலதிக விசாரணைக்காக யாழ் . நீரியல் வள திணைக்களப் பணிப்பாளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (அ)

கிளிநொச்சி வேட்பாளர்களுக்கு கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜன.01

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைகளிலும் போட்டியிடுகின்ற த.தே.கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கான கலந்துரையாடலொன்று நேற்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களான த.குருகுலராஜா, சு.பசுபதிப் பிள்ளை உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

பலஸ்தீனத்துக்கு இலங்கை ஆதரவு

கொழும்பு, ஜன.01

பலஸ்தீன மக்களின் சுதந்திரத்துக்கான போராட்டத்துக்கு இலங்கை தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரில் பலஸ்தீன தூதரகத்தை அமைப்பதற்கு அரசு காணித்துண்டு ஒன்றை அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

இதற்கு நன்றி தெரிவித்து பலஸ்தீன அதிகாரசபையின் தலைவர் மஹ்முட் அப்பாஸ், ஜனாதிபதி மைத்திரிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதற்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே, பலஸ்தீன மக்களின் சுதந்திரத்துக்கான போராட்டத்துக்கு இலங்கை தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

"கொழும்பில் பலஸ்தீன தூதரகத்தை அமைப்பதற்கு காணித்துண்டு ஒன்றை வழங்கியது, எங்கள் நீண்டகால நட்புறவுகளின் மற்றொரு மைல்கல் என்று குறிப்பிட்டுள்ளதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

பலஸ்தீன மக்களின் மறுக்கப்பட முடியாத உரிமைகள் மற்றும் ஐ.நா பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களுக்கு அமைய ஒரு சுதந்திரமான, இறையாண்மை அரசை உருவாக்குவதற்கான அவர்களின் உரிமையைத் தொடர்ந்து ஆதரிக்கிறது. இரு நாடுகளின் பரஸ்பர நன்மைக்காக பலஸ்தீன அரசுடன் தொடர்ச்சியான ஒத்துழைப்பை பேணிக் கொள்வதற்கு இலங்கை உறுதிபூண்டுள்ளது" என்றும் மைத்திரி குறிப்பிட்டுள்ளார். (அ)

வெளிநாட்டுத் தபால்களுக்கு கட்டணங்கள் இன்று அதிகரிப்பு

கொழும்பு, ஜன.01

வெளிநாட்டுத்தபால்களுக்கான கட்டணங்கள் இன்று முதல் அதிகரிக்கப்படவுள்ளன.

இதுதொடர்பான சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு தபால் கட்டணங்கள் 5 ரூபாவினால் அதிகரிக்கப்படுவதாகவும், விமானப் பொதிகளுக்கான கட்டணங்கள் குறித்த நாடுகளுக்கு அமைய மாறுபடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு தபால் கட்டண அதிகரிப்பானது, ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளப்படும் நிலையில், இறுதியாக 2011ஆம் ஆண்டே தபாற் கட்டண திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டதாக தபால்மா அதிபர் ரோஹன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து உள்நாட்டு தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக தபால் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளது. (அ)

தேர்தல் மீறல்கள் 78 பேர் கைதாகினர்

கொழும்பு, ஜன.01

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பிலான மீறல் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 78 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறல் மற்றும் தேர்தல்கள் சட்டங்களை மீறியது தொடர்பிலான முறைப்பாடுகள் அடிப்படையில், இந்த மாதம் 9ஆம் திகதியிலிருந்து நேற்றுக் காலை 6 மணிவரை 78 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ். எஸ். பி. பிரசந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

இதில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் சில வேட்பாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்றும் அவர் தெரிவித்துள்ளனர். (அ)

சிதம்பரத்துக்கு கப்பல் சேவை அடுத்த வாரம் சாத்தியமாகும்



கொழும்பு, ஜன. 01

வடக்கு மாகாண பக்தர்களை சிதம்பரம் அழைத்துச் செல்வதற்காக யாழ்ப்பாணம் - தமிழகம் இடையிலான கப்பல் சேவை அடுத்த வாரம் சாத்தியமாகும் என மாகாண ஆளுநர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தையடுத்தே அவர் இந்த நம்பிக்கையை வெளியிட்டார். துறைமுகங்கள் அதிகாரி சபையினர், வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள், இந்து விவகார அமைச்சின் அதிகாரிகள், வடக்கு மாகாண ஆளுநர், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு கே.சச்சிதானந்தம் உள்பட பலர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதன்போது எதிர்வரும் 15ஆம் திகதி வரை சிதம்பரம் செல்வதற்கான அனுமதியை நீடிக்குமாறு இந்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும், இந்து விவகார அமைச்சிடம் யாத்திரீகர்களுக்கான கப்பல் ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் கூறினார். எதிர்வரும் 13 ஆம் திகதி கப்பல் ஒழுங்கு சாத்தியமாகும் என கூட்டத்தில் கலந்துகொண்டவர்களும் தெரிவித்துள்ளனர்.

"இதுவரை சிதம்பரம் செல்வதற்காக 70 விண்ணப்பங்கள் யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகத்திற்குக் கிடைத்துள்ளன. கப்பல் ஒழுங்கு உறுதிப்படுத்தப்பட்டவுடன் மேலும் 300 பேர் வரை சிதம்பர யாத்திரைக்கு கப்பல் மூலம் செல்வதற்குத் தயாராக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பித்தவர்களுக்கு ஒருநாளில் விசா வழங்கப்படும்" என்று இந்திய துணைத் தூதரகர் தெரிவித்தார். (ச)

பாய்ந்தது இ.போ.ச பஸ் நொறுங்கியது சலூன்

வடமராட்சி, ஜன. 11

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததில் சலூன் ஒன்று முற்றாக நொறுங்கி அழிந்தது.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணியளவில் கொடிகாமம் - வடமராட்சி வீதியில் வரணியில் இடம்பெற்றது.

இதில் பஸ்ஸின் சாரதிக்கும், சில பயணிகளுக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டன. சலூன் மூடப்பட்டு இருந்தமையால் பாரதூரமான பாதிப்புக்கள் எவையும் ஏற்படவில்லை எனக் கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (11)

வடக்கு மக்களே அச்சம் கொள்ளாதீர்கள்

கொழும்பு, ஜன. 01

வடமாகாணத்தில் பரவிவரும் காய்ச்சல் தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அனில் யாசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவில் ஒரு வகையான காய்ச்சலால் சிலர் உயிரிழந்திருப்பதாகக் கூறப்பட்டதை அடுத்து அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இந்தக் காய்ச்சல் ஒரு தொற்று நோய் அல்ல. உயிரிழந்தவர்கள் வெவ்வேறு காரணங்களின் அடிப்படையில் உயிரிழந்தனர் என மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது என்றும் அனில் யாசிங்க மேலும் தெரிவித்தார். (ச)

முடிவெட்டப் போனவரின் முதுகு கிழிந்தது

புத்தளம், ஜன. 01

தலை முடியை வெட்டிக் கொள்வதற்காக சென்ற நபர் ஒருவரின் முதுகு வெட்டப்பட்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

புத்தளம் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. புத்தளம் நகரில் அமைந்துள்ள சிகை அலங்கார நிலையமொன்றுக்கு முடி வெட்டுவதற்காக சென்ற நபர் ஒருவர் இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகி உள்ளார். முடி வெட்டுவதற்காக அறவீடு செய்யப்பட்ட கட்டணம் அதிகம் எனக் கூறிய நபருக்கும் சலூன் கடைக் காரருக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டுள்ளது. இந்த வாக்குவாதம் கைகலப்பாக மாறிக் கத்திக் குத்தில் நிறைவடைந்துள்ளது. புத்தளம் - மன்னார் வீதி ரெட்பானா பகுதியில் வசித்து வந்த நபரே கத்திக் குத்துக்கு இலக்காகியுள்ளார். சம்பவத்தில் காயமடைந்த நபர் புத்தளம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

தொடர்ச்சிகள்

புலிகளின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் இருக்கின்றனவோ. இல்லையோ ஒட்டுமொத்தத் தமிழர்களும் ஒற்றுமையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே பலப்படுத்தி வந்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக தமது அரசியல் முகவரியைப் பெற்றவர்கள், அதனை சிதைத்து அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரான துளசி தெரிவித்தார்.

வவுனியாவில் விடுதி ஒன்றில் அவர் நடத்திய சந்திப்பிலேயே மேற்கண்டவாறு துளசி தெரிவித்தார்.

மேலும், விடுதலைப் புலிகளால் ஆரம்பித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் அரசியல் வடிவமாக பயணிப்பது காலத்தின் கட்டாயம். எனவே கூட்டமைப்பு பெருவெற்றி பெற ஜனநாயகப் போராளிகள் கட்சி முழு ஆதரவு வழங்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தாது விடின் ஏனைய தேசியக் கட்சிகள் தமிழ்த் தேசியத்தின் ஊடாகப் பிரதிநிதித்துவத்தைப் பெறும் நிலை ஏற்படும்.

கூட்டமைப்புக்குள் - கூட்டமைப்பில் இருப்பவர்களில் சில விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஒற்றுமையின் வெளிப்பாடு. அனைத்துப் போராளிகளும் ஜனநாயகப போராளிகள் கட்சியுடன் இணைந்து பயணிக்கிறார்கள். எம்மிலிருந்து பிரிந்து சென்ற ஒரு சிலர்தான் கட்சிகளையும் முரண்பாடான தோற்றப்பாட்டையும் உருவாக்கி செயற்படுகிறார்கள்.

2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியபோது, அந்தக் கட்டமைப்பில் இருந்தவர்களை விடத் திறமையான அரசியலாளர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தனர். ஆனால் காலத்தின் தேவை கருதியே தலைவர் சிலரை ஒன்றிணைத்து கூட்டமைப்பை உருவாக்கினார் - என்றார்.

அரசியலுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாடு முழுவதும் - 234 தொகுதிகளிலும் போட்டியிடுவேன் என அறிவித்திருக்கிறார் நடிகர் ரஜினிகாந்த்.

ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவார? மாட்டாரா? என ஒரு பக்கம் பரவலாக பேச்சு அடிபட, இந்தா வருகிறேன்... அந்தா வருகிறேன்... எனப் போக்குக் காட்டிக் கொண்டிருந்தார் ரஜினிகாந்த்.

அண்மையில் நடிகர் கமல்ஹாசன் அரசியலுக்கு வரப் போகிறார் என அறிவித்திருந்தார். இந்நிலையில் ரஜினியும் அரசியலுக்கு வருவதற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தி ரசிகர் சந்திப்புக்களைத் தொடங்கினார்.

இரண்டாம் கட்டமாக ரசிகர்கள் சந்திப்பு சென்னையில் நேற்று நடந்தது. இதிலேயே தனது அரசியல் பிரவேசம் குறித்து ரஜினிகாந்த் அறிவித்தார்.

நான் அரசியலுக்கு வருவது உறுதி. இது காலத்தின் கட்டாயம். வரும் சட்டசபை தேர்தலுக்கு முன் தனிக்கட்சி தொடங்கி 234 தொகுதிகளிலும் போட்டியிடவுள்ளேன். காலம் குறைவாக உள்ளதால் அதற்கு முன்வரும் உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட போவதில்லை. லோக்சபா தேர்தலில் போட்டியிடுவது குறித்து அப்போது முடிவு செய்யலாம் பேருக்கோ, புகழுக்கோ ஆசைப்பட்டு நான் அரசியலுக்கு வரவில்லை. அதை நான் நினைத்துக்கூட பார்க்காத அளவிற்கு பல மடங்கு நீங்கள் ஏற்கனவே எனக்கு கொடுத்து விட்டீர்கள்.

பதவிக்கும் நான் ஆசைப்படவில்லை. அப்படி நான் பதவிக்கு ஆசைப்பட்டிருந்தால் 1994 லேயே என்னை தேடி வந்தது. அப்போது வரதா பதவி ஆசை, 68 வயதில் எனக்கு வருமா? அப்படி ஆசைப்பட்டால் நான் பைத்தியக்காரன். நான் ஆன்மீகவாதி என சொல்லிக் கொள்ள தகுதி இல்லாதவன். அரசியல் மிகவும் கெட்டு விட்டது. ஜனநாயகம் சீர்கெட்டுப்போய் உள்ளது. கடந்த ஓராண்டில் தமிழகத்தில் நடந்த சில அரசியல் நிகழ்வுகள், சம்பவங்கள் தமிழகத்தில் உள்ள ஒவ்வொருவரையும் தலைகுனிய வைத்து விட்டது.

எல்லா மாநில மக்களும் நம்மைப் பார்த்து சிரிக்கிறார்கள். இப்போது நான் என்னை வாழ வைத்த தெய்வங்களான மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதற்காக அரசியலுக்கு வருகிறேன். இப்போதும் நான் வரவில்லை என்றால் என்னை வாழ வைத்த மக்களுக்கு நல்லது செய்யவில்லை என்ற குற்ற உணர்வு நான் சாகும் வரை எனக்குள் இருந்து கொண்டே இருக்கும் - என்று ரஜினி கூறினார். (ச)

கென்யாவில் விபத்து!

30 பேர் பரிதாபப் பலி

கென்யா, ஜன.01

மத்திய கென்யாவில் பஸ் ஒன்றும், லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் 30 பேர் பலியாகியதோடு 16 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

நகுரு நகர் அருகில் நகுரு-எல்டோரெட் நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலை 3 மணியளவில் புசியாவிலிருந்து சென்று கொண்டிருந்த பஸ் நகுருவிலிருந்து வந்து கொண்டிருந்த லொறியுடன் நேருக்கு நேர் மோதியது. இதில் 30 பேர் பலியாகியுள்ளனர்.

"நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த போது மிகப்பெரிய சத்தம் கேட்டது, உடனே நாலாப்பக்கமும் அழுகையும் ஓலமும் வெடித்தது. நான் பின்னிருக்கையில் அமர்ந்திருந்தேன் என் கால்கள் இடிபாடுகளில் சிக்கியது, மீட்கப்பட்டேன். பல உடல்கள் தாறுமாறாக சேதமடைந்ததைக் கண்ணால் பார்த்தபோது அதிர்ச்சியும் வேதனையும் ஏற்பட்டது" என்று விபத்தில் காயமடைந்தவர் தெரிவித்தார்.

கென்யாவில் ஆண்டுக்கு 3,000 பேர் சாலை விபத்துகளில் பலியாவதாக அரச தரப்பு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

ரஜினியை எதிர்ப்போம்

சென்னை, ஜன.01

"ரஜினி அரசியலுக்கு வந்தால் அவரை எதிர்த்துக் கடுமையான அரசியல் செய்வோம்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

அரசியலுக்கு வரப்போவதாக நடிகர் ரஜினி அறிவித்ததையடுத்தே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

"தமிழ்நாட்டில் மட்டும் தான் அனைவரும் ஜனநாயகமும் பேசுவார்கள், யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம் என்று இந்த தேசத்தில் மட்டும் தான் சொல்வார்கள். காவிரிப் பிரச்சினையின் போது சொந்த நாட்டிலேயே மக்கள் அகதிகளைப் போல விரட்டியடிக்கப்பட்டார்களே அப்போது எங்கே போனார் ரஜினி? பேருந்துகள் அடித்து நொறுக்கப்பட்டதோடு, ஆண்களும், பெண்களும் தாக்கப்பட்டனர். அப்போது ஏன் மக்களை அடித்து விரட்டுகிறார்கள் என்று யாரும் கேட்கவில்லையே. ரஜினி அரசியலுக்கு வந்தால் அவரை கடுமையாக எதிர்த்து அரசியல் செய்வோம். ரஜினிக்கு என்ன கொள்கை இருக்கிறது? திரையுலகில் உள்ள புகழை வைத்துக்கொண்டு அரசியலுக்கு வருவேன் என்று சொல்வது சந்தர்ப்பவாதம் தானே" என்று சீமான் கொந்தளித்துள்ளார். (அ)

ஓவியாவுடன் சிம்பு

சென்னை, ஜன.01

'ஏஏஏ' படத்தின் பிரச்சினைகளுக்குப் பிறகு தன்னுடைய அடுத்த பட விஷயங்களில் சிம்பு மும்முரமாக இருக்கிறார். மணிரத்னம் படத்துக்காக உடல் எடை எல்லாம் குறைத்து வித்தியாசமாக நடிக்கிறார் சிம்பு. இப்படத்துக்கு நடுவில் அவரது அடுத்த படம் தொடர்பில் செய்திகள் உலா வருகின்றன.

இந்த நிலையில் சிம்பு, ஆர்.ஜே. விஜய் மற்றும் ஓவியா மூவரும் சேர்ந்து எடுத்த ஒரு புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி வருகிறது. இதைப் பார்த்த ரசிகர்கள் புதிய படத்தில் மூவரும் இணைகிறார்களா என்று கேள்வி எழுப்பி வருகின்றனர். ஆனால் இவர்கள் ஒரு இசை அல்பத்துக்காகவே இணைந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (அ)

பாகிஸ்தான் மீது அமெரிக்கா சீற்றம்

நிதியுதவியும் நிறுத்தம்

வோஷிங்டன், ஜன.01

தீவிரவாத அமைப்புகள் மீது நடவடிக்கை எடுக்காத பாகிஸ்தானுக்கு 1,650 கோடி ரூபா நிதியை நிறுத்தி வைப்பது குறித்து அமெரிக்கா பரிசீலனை செய்து வருகிறது.

கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக பாகிஸ்தான் இராணுவத்துக்கு ஆண்டுதோறும் அமெரிக்கா நிதியுதவி வழங்கி வருகிறது. இதுவரை 2.14 லட்சம் கோடி ரூபாவை வழங்கி உள்ளது. ஆனால் தீவிரவாத அமைப்புகளை ஒழிப்பதில் பாகிஸ்தான் தீவிரமாகச் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது.

குறிப்பாக, கனடா-அமெரிக்க தம்பதிகள் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்கானில் கடத்தப்பட்டனர். இவர்களை பாகிஸ்தானின் ஹக்கானி தீவிரவாத அமைப்பினர் கடத்தியதாகத் தகவல் வெளியானது. ஆனால் அவர்களைப் பற்றிய விவரத்தைத்தர பாகிஸ்தான் மறுத்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே, அமெரிக்கா கொடுத்த தகவலின் அடிப்படையில் சமீபத்தில் அவர்கள் மீட்கப்பட்டனர். இதனால் பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவிலிருந்து வெளிவரும் முன்னணி நாளிதழில், "தீவிரவாத அமைப்புகள் மீது பாகிஸ்தான் அரசு உரிய நடவடிக்கை எடுக்காததால் அமெரிக்கா அதிருப்தி அடைந்துள்ளது. இதனால் பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் 1,650 கோடி ரூபா நிதியுதவியை நிறுத்தி வைப்பது குறித்து அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான அரசு ஆலோசித்து வருகிறது" எனச் செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

130 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்திய டைனோசர் முட்டைகள்

சீனாவில் கண்டுபிடிப்பு

பீஜிங், ஜன.01

சீனாவின் ஜியாங்சி மாகாணத்தில் 130 மில்லியன் ஆண்டுகள் பழமையான டைனோசர் முட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பாடசாலை ஒன்றின் கட்டுமான பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் குறித்த முட்டையைக் கண்டுபிடித்துள்ளனர். இதுவரை குறித்த பகுதியில் இருந்து 30 டைனோசர் முட்டைகளை மீட்டுள்ள நிலையில், அந்தப் பகுதியில் டைனோசர்கள் மிக அதிகமாக வாழ்ந்து வந்துள்ளது நிரூபணமாகியுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். 130 மில்லியன் ஆண்டுகள் பழமையான அந்த முட்டைகள் கட்டுமான ஊழியர்களின் இயந்திரங்களுக்கு சிக்காமல் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளது.

தடிமனான ஓட்டுடன் பாறை போன்ற பொருள் இருப்பதை அறிந்த கட்டுமான ஊழியர்கள் உடனடியாக தொடர்புடைய அதிகாரிகளுக்கும், பொலிஸாருக்கும் தகவல் அளித்தனர். இதனையடுத்து குறித்த கட்டுமானப் பகுதிக்கு விரைந்து வந்த அதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸார், அந்தப் பகுதியில் இருந்து 30 முட்டைகள் வரை இதுவரை மீட்டுள்ளனர். தற்போது மீட்கப்பட்டுள்ள முட்டைகளை அடுத்தகட்ட ஆய்வுக்காக தேசிய அருங்காட்சியகத்தில் பாதுகாத்து வருகின்றனர். (அ)

கண்ணீர்த் திருமணம்

வோஷிங்டன், ஜன.01

மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த பெண்ணொருவர் தனது காதலனை மருத்துவமனையில் திருமணம் செய்த நிலையில் அடுத்த 18 மணி நேரத்தில் உயிரிழந்துள்ளார்.

அமெரிக்காவின் ஹார்போர்ட் நகரிலேயே இந்தச் சோகச் சம்பவம் நடந்துள்ளது. டேவிட் மோஷர் (வயது - 35) என்ற இளைஞரும், ஹீத்தர் லிண்ட்சே (வயது- 31) என்ற பெண்ணும் சில ஆண்டுகளாக நண்பர்களாக இருந்தனர். சிலநாட்களில் இருவருக்குள்ளும் காதல் ஏற்பட்டது.

இந்நிலையில் கடந்த வருடம் டிசம்பர் 23-ஆம் திகதி லிண்ட்சேவிடம் தனது காதலை வெளிப்படுத்த டேவிட் முடிவெடுத்தபோது, லிண்ட்சேவுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது.

பின்னர் இருவரும் மருத்துவமனைக்கு சென்ற பரிசோதனை செய்தபோது லிண்ட்சேவுக்கு மார்பகப் புற்றுநோய் இருப்பது தெரியவந்தது. ஆனாலும் தனது காதலில் இருந்து டேவிட் பின் வாங்கவில்லை. லிண்ட்சே தொடர்ந்து சிகிச்சை எடுத்து வந்த நிலையில் கடந்த செப்ரெம்பரில் புற்றுநோய் அவரின் மூளை மற்றும் நுரையீரலுக்கு பரவியதை மருத்துவர்கள் கண்டுப்பிடித்தனர். மேலும். லிண்ட்சே சில காலத்தில் உயிரிழந்து விடுவார் என மருத்துவர்கள் கூறினார்கள். இதையடுத்து கடந்த 22-ஆம் திகதி மருத்துவமனையில் டேவிட்-லிண்ட்சே திருமணம் நடைபெற்றது.

இந்த நெகிழ்ச்சியான தருணத்தைப் பார்த்த அருகிலிருந்த நண்பர்கள் மற்றும் உறவினர்கள் கண் கலங்கினார்கள். திருமணம் நடந்த அடுத்த 18 மணி நேரத்தில் லிண்ட்சே உயிரிழந்தார். (அ)

புத்தாண்டு வாழ்த்துச் செய்திகள்

சுபீட்சமும் சமாதானமும் புதிய ஆண்டில் மிளிரட்டும்

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வாழ்த்து



செய்தியின் முழுவிவரம் வருமாறு-

இன்று புதிதாக மலரும் 2018 ஆம் ஆண்டு அனத்து மக்களுக்குதம் அமைதி யையும் சமாதானத்தையும் வழங்கு கின்ற ஒரு புதிய ஆண்டாக மிளிர வேண் டும் என வாழ்த்துகிறேன். எம்மிட மிருந்து விடைபெறும் 2017 ஆம் ஆண்டை அன்புடன் வழியனுப்பி 2018 ஆம் ஆண்டை மகிழ்வுடன் வர வேற்போம்.

இப்புதிய ஆண்டில் எம்மிடையே காணப்படுகின்ற விரோத உணர்வுகள் அனைத்தும் அகலக் கடவதாக! எது அரசியல்த் தலைமைகள் தமக்குள் போட்டி போட்டுக் கொண்டு தமது வேறுபட்ட கருத்துக்களை வெளியிடு வதைத் தவிர்ப்பாளர்களாக!

எமது மக்களின் சுகவாழ்வுக்கும் நிலைபேறான அரசியல் அந்தஸ்துக் குமாக யாவரும் ஒன்றிணைந்து பாடு பட இப்புத்தாண்டு வழிவகுப்பதாக. 2018 ஆம் ஆண்டு அனைவருக்கும் சுபீட்சத்தையும் சுக வாழ்வையும் மன அமைதியையும் வழங்குகின்ற புதிய ஆண்டாகத் திகழ வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

யாழ்ப்பாணம், ஜன. 01

எமது மக்களின் சுகவாழ்வுக்கும் நிலைபேறான அரசியல் அந்தஸ்துக் கும் அனைவரும் ஒன்றிணைந்து பாடு படும் ஆண்டாக 2018 அமையட்டும் எனத் தனது புதுவருட வாழ்த்தில் தெரி வித்திருக்கிறார் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

அவர் அனுப்பி வைத்த வாழ்த்துச்

வளமான தேசத்தை உருவாக்குவோம்

ஜனாதிபதி சிறிசேன

கடந்த காலத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் ஒவ்வொரு கணமும் எம்மை அறிவாலும் அனுபவத்தாலும் பரிபூரணப்படுத்தும். இதேபோன்று மலரும் ஒவ்வொரு நிமிடமும் எமது ஆற்றல்களை பரீட்சித்துப் பார்த்த வண்ணமே இருக்கிறது. இதன்போது நாம் வெளிப்படுத்தும் அர்ப்பணிப்பும் உறுதிப்பாடுமே எம்மை வெற்றியை நோக்கி இட்டுச் செல்கின்றன.

நிறைவேறும் வருடத்திற்கு விடை கொடுப்பதும் மலரும் புத்தாண்டை எதிர்பார்ப்புகளுடன் வரவேற்பதும் இந்த அடிப்படையிலேயே நிகழ்கின்றது.

மொரகஹந்த நீர்த்தேக்கத்தின் மங் கள நீரைக் கொண்டு வளமான தேசத்தை உருவாக்குவோம். எதிர் கால எதிர்பார்ப்புகள் சுடர் விட்டு பிர காசிக்கும் ரம்மியமான பொழுதில் மல ரும் புத்தாண்டு மக்கள் அனைவருக் கும்சௌபாக்கியமும்ஆரோக்கியமும் கிட்ட வாழ்த்துகிறேன்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 01.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.